**MCOP.98 of 2023 தேதி: 17.06.2026.**

**பெயர்: திருமதி. பாரதி** (ம.சா.1)

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) விபத்து எந்த இடத்தில் நடந்தது என்றால் கருமாட்சி பாளையம் என்ற இடத்தில் நடந்தது. விபத்து நடந்த நேரத்தில் பங்குனி உத்திரம் என்பதால் காவடி எடுத்துக்கொண்டு கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். என்மீது இருசக்கர வாகனம் மோதியதா என்றால் Bajaj Pulsar இருசக்கர வாகனம் மோதியது.

2) இருசக்கர வாகன ஓட்டுநர் மெதுவாக கவனமோடு வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும் நான் தான் சாலையை தீடீரென கடந்ததால் எனது கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. முதலில் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஸ்ரீராம் மருத்துவமனைக்கு சென்று முதலுதவி எடுத்துக்கொண்டு பின்னிட்டு கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதன்பிறகு வடலூர் சுதா மருத்துவமனைக்கு சென்றேன்.

3) எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்றால் வலது கால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது வேலையை பிறர் உதவியின்றி செய்துவருகிறேன் என்றால் சரியல்ல, பிறர் உதவியுடன் தான் செய்து வருகிறேன். நான் விபத்திற்கு முன்பாக தனிப்பட்ட முறையில் வேலை பார்த்து வந்தேனா என்றால் டியூஷன் எடுத்தும் தையல் வேலையும் செய்தேன். அவ்வாறு டியூஷன் எடுத்ததற்கும் தையல் வேலை பார்த்ததற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) எங்களது விவசாய நிலத்தில் தற்போது பயிர் விளைந்து கொண்டிருக்கிறது என்றால் மற்றவர்களை வேலைக்கு அமர்த்தி விவசாயம் செய்து வருகிறோம். நான் விவசாய நிலத்தில் இறங்கி

வேலை செய்யமாட்டேன் என்றும் மேற்பார்வை மட்டுமே செய்வேன் என்றால் சரிதான். விபத்தினால் விவசாய வேலை பாதிப்படைவில்லை என்றால் சரியல்ல பாதித்துள்ளது.

5) நான் மருத்துவ செலவின பில்களை வழக்கிற்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 போக்குவரத்திற்காக செலவு செய்ததாக பில்களை ஒரே இடத்தில் வாங்கி இருக்கிறேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.10 பில்லில் கண்ட தேதிகளில் நான் சிகிச்சை எடுத்தேன் என்பதை காட்ட மருத்துவ குறிப்புகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) இருசக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர் திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டப்படி இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் நடந்ததால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

(ஒப்பம்/–திரு.P.முருகன், பி.ஏ., எல்.எல்.பி.,)
சார்பு நீதிபதி,
நெய்வேலி